11th August 1965]

சொல்லக்கூடியவர்கள் சேர்ந்து ஆரம்பிக்கின்ற விவசாயத்திட்டம் முன்னால் நல்லமுறையில் நடைபெற்றுக்கொண்டிருந்தபடியும் இப்போது விவசாய முறை நடந்து கொண்டிருக்கும்.

திரு. சா. கணேசன் : இந்த ஜாயின்ட் பார்ம் அல்லது கூட்டுப் பண்ணை என்பது ஒன்றுக்கு மேற்பட்ட பட்டாதார்கள் அல்லது நிலச்சுவான்தார்கள் சேர்ந்து அவர்களே முழுக்க முழுக்க அதை நிர்வகிக்கிறார்களா ? அல்லது கோவாப்ரட்டிவ் முறையில் தங்கள் நிலங்களை எல்லாம் அதில் கொடுத்துவிட்டு, தங்களுக்குள் சிலரை தேர்ந்தெடுத்து அவர்களிடம் ஒப்படைத்து விட்டு சுவான்தார்கள் மேற்பார்வை அல்லது உழைப்பு இன்றி நடைபெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இப்போது ஜாயின்ட் பார்ம்-மில் சேருகின்றவர்களின் பட்டா நிலங்களைச் சேர்த்து விவசாயம் செய்கின்ற முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் ஏதாவது மேற்பார்வைக்காகவோ அல்லது கணக்கு முதலியவைகளை பார்ப்பதற்காகவோ உதவி வேண்டும் என்று கேட்டால், சீனியர் இன்ஸ்பெக்டர்களின் உதவியை சர்க்காரிலிருந்து கொடுக்கிறோம்.

வடாற்காடு மாவட்டம், மோரணம் காட்டுப் பகுதியை வளப்படுத்துதல்

* 232 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் தரிசு நிலங்களை வளமாக்கும் கழகத்தைச் (Waste Land Improvement Corporation) சேர்ந்த நிபுணர்கள் வடாற்காடு மாவட்டம், செய்யாறு வட்டம், மோரணம் காட்டுப் பகுதியைப் பார்வையிட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :

(அ) ஆம்.

(இ) பார்வையிட்டது குறித்து விரிவான அதிகார பூர்வமான அறிக்கை ஒன்று எதிர்பார்க்கப்படுகிறது.

புலவர் கா. கோவிந்தன் : அந்தப் பகுதியில் புதிதாக இப்போது இரண்டாயிரம் ஏக்கர் நிலங்கள் வரை சாகுபடிக்குக் கொண்டு வரக்கூடிய நிலங்களாக இருப்பதாக தெரிகிறது. ஆகவே இதை உடனடியாக சாகுபடிக்கு மாற்றுவதற்கு அரசாங்கம் தீவிர நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இதற்காக போடப்பட்டிருக்கும் கமிட்டி பார்வையிட்டு, அவர்களுடைய ரிப்போர்ட் வரும் என்று அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.